**Date. 04.07.2025.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.58/2021**

**வா.சா. 1**

**பெயர். திரு. வெங்கட்ராமன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**1, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

எனது மாமனார் பெயர் சுப்பராய ரெட்டியார். அவருக்கு நிலங்கள் இருந்தது என்றால் சரிதான். அந்த நிலத்தின் பெயர்கள் எனக்கு தெரியாது. அவர் 1995 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு அவரது மகள் மற்றும் மகன்களுக்கு நிலம் கொடுத்தாரா? என்றால் யாருக்கும் கொடுக்கவில்லை. என் மனைவிக்கு ஆவணம் ஏதாவது எழுதி வைத்தாரா? என்றால் இல்லை. எனது மாமனாரின் கையெழுத்து எனக்கு தெரியுமா? என்றால், ஓரளவிற்கு தெரியும். மறுபடியும் சாட்சி மாற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். ஹரிதாஸ் என்பவர் எனது மாமியாரின் தம்பி ஆவார். அவருக்கு எனது மாமியார் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்து பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஹரிதாசுக்கு எனது மாமியார் ஞானாம்பிகை பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். அந்த பொது அதிகார பத்திரத்தை எனது தரப்பில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது வரையில் அந்த பொது அதிகார ஆவணம் அமுலில் உள்ளது என்றால், ஞானாம்பிகை இறந்து விட்டதால், அந்த பொது அதிகார ஆவணம் செயலாற்றதாகி போய்விட்டது. ஞானாம்பிகை பத்திரத்தின் அடிப்படையில், ஹரிதாஸ் என்பவர் தான் சொத்தை விற்பனை மற்றும் பரிமாற்றம் செய்து கொண்டிருந்தார் என்றால், அந்த பொது அதிகார ஆவணத்தில் உள்ள சொத்துக்களில் இரண்டு அல்லது மூன்று சொத்துகளுக்கு தான் ஞானாம்பிகை பெயரில் பட்டா உள்ளது. மீத சொத்துக்கள் ரவி ரெட்டியார் பெயரிலும், ராஜ்குமார் ரெட்டியார் பெயரிலும், ரவி ரெட்டியார் ராஜ்குமார் ரெட்டியார் இருவர் பெயரிலும், சங்கரி பெயரிலும் பட்டா உள்ளது. சங்கரி என்பவர் எனது மனைவியின் தங்கை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பொது அதிகார ஆவணத்தை ஞானாம்பிகை உயிருடன் இருக்கும் வரை ரத்து செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல ஞானாம்பிகை இறந்த பிறகு இந்த

பத்திரம் செயலிழந்துவிட்டது என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. ஞானாம்பிகை இறந்தாலும் அந்த பத்திரம் அமுலில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த பொது அதிகார ஆவணம் ரத்து செய்ய முடியாத பொது அதிகார ஆவணம் என்றால்(Irrevocable power of attorney) சரியல்ல. ஹரிதாஸ் இன்னும் உயிருடன் தான் உள்ளார். ஆதலால் இந்த வழக்கு போடுவதற்கு எனது மனைவிக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எந்தவித பாகமும், சொத்தின் சுவாதீனமும், கேட்பதற்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் அவரது சொத்துக்களை தனது மகள்களுக்கு கொஞ்சமும் தனது மகன்களுக்கு கொஞ்சமும் வாய்மொழியாக 1995-க்கு முன்பாகவே பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதை நான் மறுக்கிறேன். எனது மனைவிக்கு பட்டா எண் 115-ல் உள்ள ஒரு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். என் மனைவியும், அவருடன் பிறந்தவர்களும் சேர்ந்து, பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்களா? என்றால் இல்லை. இந்த பொது அதிகார ஆவணம் ஹரிதாசுக்கு எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால், 2015 ஆம் ஆண்டு தான் தெரியும். இதுபோன்று பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தது தவறு என்று நான் ஞானாம்பிகைக்கோ, அல்லது ஹரிதாஸுக்கோ, வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால், ஹரிதாசுக்கு கொடுக்கவில்லை. ஞானாம்பிகைக்கு கொடுத்தேன். பாகம் கேட்டு தான் ஞானாம்பிக்கைக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். ஆனால் பொது அதிகார ஆவணத்தை கேள்வி கேட்டு கொடுக்கவில்லை. அந்த பொது அதிகார ஆவணமே செல்லாது என்பதால் நான் அதை கேள்வி கேட்கவில்லை. அந்த பவர் பத்திரத்தில் ரவி ரெட்டியாரும் அவரது மனைவி இந்திரா காந்தியும் மட்டுமே கையெழுத்து போட்டு உள்ளார்கள் மற்ற வாரிசுகள் யாருக்கும் தெரியப்படுத்தவே இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய மனைவியுடையது தான்.

*(மேற்படி 15-05-2006 தேதியிட்ட ஆவணம் பதிவு செய்யப்படாத தான செட்டில்மெண்ட் ஆவணம் என்பதால், குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதற்கு தனியான மனு தாக்கல் செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது).*

**(குறுக்கு விசாரணை கேட்டுக் கொண்டதற்கிணங்க பகுதியாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது).**